## திருவண்ணாமலை - செய்யாறு பகுதியில்

# ரூ.1000 கோடி மதிப்பில் ராயல் என்ஃபீல்டு ஆலை!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

திருவண்ணாமலை, மே 14-

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு பகுதியில் ரூ. 1,000 கோடி முதலீட்டில் ராயல் என்ஃபீல்டு எலக்ட்ரிக் ஆலை நிறுவப்படும் என தமிழக அரசு தெரிவித்திருக்கிறது. ராயல் என்ஃபீல்டு நிறுவனம் மின்சார இருசக்கர வாகன உற்பத்தியை தொடங்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. பிரபல மோட்டார் சைக்கிள் ராயல் என்ஃபீல்டு நிறுவனம் தனது முதல் எலக்ட்ரிக் இருசக்கர வாகனம் உற்பத்தியை திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு பகுதியில் அமைக்கவுள்ளது.

60 ஏக்கர் நிலப்பரப்பளவில் ரூ.1000 கோடி முதலீட்டில் இந்த எலக்ட்ரிக் ராயல் என்ஃபீல்டு வாகனம் முதன்முறையாக தயாராகிறது. இந்த நிதி ஆண்டில் இதற்கான பணியை தொடங்குவோம் என்று அந்த நிறுவனம் திட்ட மிட்டுள்ளதாக தமிழக அரசின் தொழில் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே ஓலா நிறுவனத்தின் எலக்ட்ரிக் வாகனம் கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி பகுதியில் பணிகள் நடைபெற்று உற்பத்தி தொடங்கி உள்ள நிலையில், இந்த அடுத்த தலைமுறைகனா எலக்ட்ரிக் வாகனம் மிகவும் அதிக அளவில் தொடங்கியுள்ளது.

திருவண்ணாமலை போன்ற பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கக்கூடிய மாவட்டத்தில் ஆரம்பத்தில் மூலம் அங்கு ஏராளமான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இச்சர் மோட்டார் நிறுவனம் தான் இந்த ராயல் என்ஃபீல்டு என கூறப்படுகிறது. அந்த நிறுவனத்துடைய இந்த மின்சார இருசக்கர வாகனம் என்பது பெரிதும் முக்கிய முதலீடாக பார்க்கப்படுகின்றது.

தொழில் துறை சார்பில் கடந்த சில தினங்களாக ஹ்யுண்டாய் கார் நிறுவனத்தின் உடைய முதலீடு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேரடியாக தொடங்கி வைத்த இரண்டு திட்டங்கள் இருக்கின்றன, இதன் தொடர்ச்சியாக சிஸ்கோ என்ற அமெரிக்க நிறுவனம் பெரிய அளவிலான முதலீடு செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

**கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (SWD/Mech) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது**

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/0967/2023 சிப்பம் 1 முதல் 3 வரை**
பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்க 36 எண்ணிக்கையில் பின்புறம் மூடிய வாகனங்கள் (Rear Body Closed Vehicle) ஒரு வருட காலத்திற்கு (312 நாட்கள்) (26X12) வாடகை முறையில் பணியமர்த்தும் பணி (சிப்பம் 1க்கு 16 வாகனங்கள் (வடக்கு வட்டாரம்), சிப்பம் - 2க்கு 10 வாகனங்கள் (மத்திய வட்டாரம்), சிப்பம் - 3க்கு 10 வாகனங்கள் (தெற்கு வட்டாரம்).

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **23.05.2023 பிற்பகல் 3.00, மணி**

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **24.05.2023 பிற்பகல் 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு : **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2571 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **மேற்பார்வை பொறியாளர் (இ/ம.நீ.வ.)**

**சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்**




தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (12.05.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில், பழங்குடியினர் சாதிச்சான்று மெய்த்தன்மை தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# கூவாய் இளங்குயிலே!




ஏட்டைத் திருப்பி, இந்தி
எழமீண்டும் துடிக்கிறது!
சாட்டைஎடுப் பான்தமிழன்!
சண்டிஇந்திக் குதிரை,அதன்
சேட்டை ஒடியும்என்றும்
செங்கோட்டை யின்கனவுக்
கோட்டை இடியும்என்றும்
கூவாய் இளங்குயிலே!

போகாயோ? என்றொழிந்துப்
போனபின்பும், மீண்டும்இங்கே
"ஆகாஷ் வாணி"வந்தேன்
அலறுதற்கு நுழைகிறது?
பாகினிய தமிழ்க்கிளையில்
பறந்தமரப் பாயும், இந்திக்
"கூகை"யின்வாய் கிழியும்எனக்
கூவாய் இளங்குயிலே!

துதிக்கும்உங்கள் இந்தியினைத்
தூக்கி,எங்கள் உணர்வுகளை
மிதிக்க நினைப்பீரேல்,
மேலாதிக் கச்சுவடு
பதிக்கத் துடிப்பீரேல்,
படைமறவர் பெருங்கூட்டம்
குதிக்கும் களத்தில்! எனக்
கூவாய் இளங்குயிலே!

வாடிக்கை யான(து)இந்தி
வாலாட்டம்! இனியும்இந்த
வேடிக்கை ஆணவத்தை
வேரோ டறுக்காமல்
நீடிக்க விடலாமா?
நெருப்பெடுத்துப் பதினாறு
கோடிக்கை நீளும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

சொந்தமண்ணில் "நீட்"
கொடுத்த
சோகம்இன்னும் தீரவில்லை!
வெந்தபுண்ணில்இந்திஎன்னும்
வேல்பாய்ச்ச முனைவாரேல்,
செந்தமிழர் திருநாட்டில்
தெருதோறும் எரிமலைகள்
கொந்தளிக்கும்!என்றுசொல்லிக்
கூவாய் இளங்குயிலே!

நஞ்சருந்தித் தீக்குளித்து
நந்தமிழைக் காப்பதற்கே
நெஞ்சுயர்த்தி இன்னுயிரை
நீத்தார்தம் நினைவலைகள்
சஞ்சரிக்கும் சுடுகாட்டுச்
சாம்பலில் இருந்(து) அக்னிக்
குஞ்சுகள் கிளம்பும்! எனக்
கூவாய் இளங்குயிலே!

ஐயா,அண்ணா, கலைஞர்
அவர்கள்இல்லைஎனும்திமிரா?
தொய்வறியாத் "தளபதி"யின்
சுட்டு விரலசைந்தால்
எய்த நினைக்கும்உங்கள்
"இந்திவெறிக் குறிக்கோளைக்"
கொய்(து)எறிவான்
தமிழன்!எனக்
கூவாய் இளங்குயிலே!

கருத்துமொழி! கவிதைமொழி!
காவியங்கள் விளைத்தமொழி!
கிருத்து பிறக்குமுன்பே
கிளைவிரித்துத்தழைத்தமொழி!
திருத்தமிகு தமிழ்மொழிக்கோர்
தீங்குவிளைத் தால்,இந்திக்
குருத்தெலும்பு முறியும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

மறப்போமோ வரலாற்றை?
மாநிலத்தின் உரிமைகளைப்
பறிப்பாரேல் பொறுப்போமோ?
பார்த்துக்கொண் டிருப்போமோ?
வெறுப்பேற்றும் இந்தியினை
விரட்டுதற்கே, அறப்போர்க்குக்
குறிப்போம் ஓர் நாள்!என்று
கூவாய் இளங்குயிலே!

வம்புக்குச் செலமாட்டான்!
வலியவந்தால் விடமாட்டான்!
"தம்பியர்" பற்றி, அண்ணா
தான்வரைந்த கடிதம்இது!
தெம்புடைய தாய்மொழியைத்
தீண்டுவரேல், இந்திமொழிக்
கொம்புடைந்து வீழும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

பகைவிட்டுப் போகும்எனப்
பண்பாடு காத்துவந்தோம்!
மிகைவிட்டுப் போகாமல்
மென்மேலும் வடபுலத்துப்
புகைவிட்டுப் பரப்புவரேல்,
புலிச்சீற்றத் தமிழ்க்கூட்டம்
குகைவிட்டுப் பாயும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

தண்டுவடம் வளைந்தவர்கள்
தலைகவிழ்ந்தார் உங்களிடம்!
ஒண்டமிழ்த்தாய்
மொழிகாக்கும்
"உதயநிதி ஸ்டாலின்" படைத்
தொண்டரடா நாங்கள்! எனத்
தோள்நிமிர்த்திப் புயல்வேகம்
கொண்டெழுவார் வீரர்! எனக்
கூவாய் இளங்குயிலே!

குழந்தையுடன் தாய்வருவாள்!
குமுறிஎழு வார்இளைஞர்!
விழுந்துப் படுத்துறங்கும்
வீட்டு முதியவரும்
எழுந்துப் புறப்படுவார்!
எட்டுத் திசைகளும், தீக்
கொழுந்து தெறிக்கும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

" பண்டிதரின் வாக்குறுதி"
பறக்கிறதே காற்றில்! அதைக்
கண்டுகொள்ள மறுக்கிறதே
கல்நெஞ்சம்! "தாமரை" யின்
தண்டறுந்து போகும்! எங்கள் .
"தமிழ்க்கோபம்" ஏவுகணைக்
குண்டைவிட வலியதெனக்
கூவாய் இளங்குயிலே!

காட்டாட்சி தொடராமல்
காவிநிறம் படியாமல்
நாட்டாட்சி "இறையாண்மை"
நலியாமல், தில்லியிலே,
பாட்டாட்சி நிலவுதல்போல்
"பன்முகத்தன் மை" போற்றும்
கூட்டாட்சி மிளிர்க! எனக்
கூவாய் இளங்குயிலே!



**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**




தோற்றம்: 15.08.1931
மறைவு: 14.05.2020

**தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் இயக்க நிறுவனர்,**
**சட்ட மேலவை முன்னாள் உறுப்பினர்**

பாவலர். திரு. **க.மீனாட்சிசுந்தரம்** அவர்களின்

மூன்றாம் ஆண்டு **நினைவு நாள்**

**பாவலர் அவர்களை போற்றுவோம்! வணங்குவோம்!**

**பாவலரின் பாதை மாறாப் பயணத்தில் பயணிப்போம்!**

முனைவர், **மன்றம். நா.சண்முகநாதன்** பொதுச்செயலாளர்

**பெ.இரா.இரவி** மாநிலத் தலைவர் **முருக.செல்வராசன்** மாநிலப் பொருளாளர்

மாநிலத் துணைத் தலைவர்கள்
**வே.விஜயகுமார்**
**அ.நெல்சன்**
**ச.சந்திரசேகரன்**

மாநிலச் செயலாளர்கள்
**ந.கிட்டு**
**செ.ராசேந்திரன்**
**பி.தசரதராமரெட்டி**

மாநிலக் கொள்கை விளக்கச் செயலாளர்கள்
**மு.மோகன்**
**மா.பாலகிருட்டிணன்**

தலைமை நிலையச் செயலாளர்கள்
**சு.ரமேஷ்**
**ப.அறிவுடைநம்பி**

வெளியீட்டுச் செயலாளர்கள்
**செக.மணிவாசகம்**
**மூ.பெரியசாமி**

மாநில சட்டப்பிரிவு செயலாளர்
**உ.சுப்பிரமணியன்**

மாநில அமைப்புச் செயலாளர்
**கோ.சிவக்குமார்**

மாநில இளைஞரணி அமைப்பாளர்
**ந.செரோம் ஆரோக்கியதாசு**

மாநில மகளிரணி அமைப்பாளர்
**ரெ.மதனா**

மாநில மகளிரணி துணை அமைப்பாளர்
**ரோஸ் இந்திரா செலின்**

இலக்கியஅணி அமைப்பாளர்
**கா.தர்மராசு**

இலக்கியஅணி துணை அமைப்பாளர்
**வெ.இராமச்சந்திரன்**

மாநில மூத்தோரணி அமைப்பாளர்
**பொன்.முத்துராமலிங்கம்**

மாநில மூத்தோரணி துணைஅமைப்பாளர்
**ப.செல்வகணபதி**

மாநில தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்
**சு.வேலுமணி**

மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்
**லு.ஆரோக்கியராசு**

மாநிலத் தீர்ப்புக் குழு உறுப்பினர்கள்
**சி.கண்ணன், ச.செந்தில்**
**ப.வெங்கட்டு**

மாநில விதிமுறைக் குழு உறுப்பினர்கள்
**அ.வனத்தையன், ஏ.ஜெயப்பிரகாசு**
**மு.செகநாதன்**

மாநில தணிக்கைக் குழு உறுப்பினர்கள்
**ப.செந்தமிழன்**

மாநிலச் சொத்துப் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள்
**ந.இரவிச்சந்திரன்**
**ஆ.பெத்தபெருமாள், பெ.பழனிச்சாமி**

**தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்**
பதிவு எண்: 17/74 மாநில அமைப்பு அரசு ஏற்பாணை எண்: 991/89